A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 80 / 2021**

திரு. K. அப்பாவு, த/பெ. குண்டு,
தெற்கு திரணியாம்பட்டி கிராமம்,
முசிறி வட்டம், திருச்சி மாவட்டம். ………மேல்முறையீட்டாளர்
(திரு. K. அப்பாவு)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ.கா./முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், T.Pet ரோடு முசிறி,
முசிறி தாலுக்கா – 621 211.

2. உதவி செயற்பொறியாளர்/இ.கா./முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், T.Pet ரோடு முசிறி,
முசிறி தாலுக்கா – 621 211.

3. உதவி பொறியாளர்/ இ.கா./அய்யம்பாளையம்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
5/41–E1, சேலம் மெயின் ரோடு, அய்யம்பாளையம் அஞ்சல்,
முசிறி தாலுக்கா – 621 202.

...... எதிர்மனுதாரர்கள்
(திரு R. அஷோக்குமார், செயற்பொறியாளர்/இ.கா./முசிறி
திரு R. செல்வம், உதவி செயற்பொறியாளர்/இ.கா./முசிறி
திரு R. சோமசுந்தரம், உதவி பொறியாளர்/ இ.கா./அய்யம்பாளையம்)

**மனு பெறப்பட்ட நாள்: 12–10–2021**

**கேட்புரை நாள்: 09–12–2021**

**ஆணை நாள்: 30–03–2022**

12.10.2021 அன்று பெறப்பட்ட திரு. K. அப்பாவு, த/பெ. குண்டு, தெற்கு திரணியாம்பட்டி கிராமம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 80/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 09.12.2021 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

முசிறி வட்டம், வெள்ளூர் அஞ்சல், தெற்கு திரணியாம்பட்டி கிராமம் என்ற முகவரியில் உள்ள ஸ்ரீசெல்வசித்தி விநாயகர் கோவிலுக்கு புதிய மின் இணைப்பு வழங்க வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் திரணியாம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ விநாயகர் கோவிலுக்கு புதிய மின் இணைப்பு வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் விண்ணப்பம் Hold செய்யப்பட்டதாகவும் மேற்படி கோவில் உள்ள இடம் திரு சுப்பிரமைணியம் பெயரில் உள்ளதாக விசாரணையின் அடிப்படையில் தெரியவந்ததாகவும் கோவில் டிரஸ்டி பதவியை பொறுத்து முசிறி உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்று வருவதால் அதன் தீர்ப்பை பொருத்து மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க இயலும் என்று விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டதால் மேற்கண்ட கோவிலுக்கு புதிய மின் இணைப்பு கோரி மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருச்சி மின்பகிர்மான வட்டம் 24.09.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

திருச்சி மின் பகிர்மான வட்டம்/மேற்கு, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 24.09.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"<u>**மன்றத்தின் தீர்வு**</u>:

*முதல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் குறிப்பிட்டபடி, அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்து 4/9/2021 அன்று நடைபெறும் அடுத்த மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் பங்குபெறுமாறு திரு.கே.அப்பாவு அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி 4/9/2021 அன்று மேற்பார்வை பொறியாளர், திருச்சி மின் பகிர்மான வட்டம், திருச்சி அலுவலகத்தில் மதியம் 3.00 மணியளவில் நடைபெற்ற அடுத்த கட்ட விசாரணையில் மன்ற உறுப்பினர்கள் மனுதாரர் திரு.கே.அப்பாவு அவர்களிடம் அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்கும்படி கூறினார். ஆனால், மனுதாரர் முதல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் சமர்ப்பிக்கும்படி குறிப்பிட்ட எந்த ஒரு ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை. ஆகையால் மன்றத்தினரால் மேற்படி எந்த முடிவும் எடுக்க இயலவில்லை. எனவே முசிறி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் உள்ள வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் தான் மேற்படி கோவில்களுக்கு மின் இணைப்பு வழங்க மேல் நடவடிக்கை எடுக்க இயலும் என மன்றத்தில் முடிவு செய்யப்பட்டு தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.*

*மேற்படி மனு எண் 01/21–22 ஆனது இம்மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 09.12.2021 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. K. அப்பாவு அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு R. அஷோக்குமார், செயற்பொறியாளர்/இ.கா./முசிறி, திரு R. செல்வம், உதவி செயற்பொறியாளர்/இ.கா./முசிறி மற்றும் திரு R. சோமசுந்தரம், உதவி பொறியாளர்/ இ.கா./அய்யம்பாளையம் திருச்சி மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட முகவரியில் வசித்து வருவதாகவும், மேற்படி தெற்கு திரணியாம்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ விநாயகர் கோவில் மற்றும் ஸ்ரீ மலையாள பகவதியம்மன் கோவிலின் தர்மகர்த்தா ஆகவும், மேற்படி கோவில்களுக்கு தான் கடந்த 13.12.1998 ஆம் தேதி முதல் நாளது தேதி வரை தர்மகர்த்தா என்ற முறையில் நிர்வாகம் செய்தும், புரணமைப்பு செய்தும் வருவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 இந்நிலையில், மேற்படி கோவிலுக்கு புதிதாக மின் இணைப்பு வேண்டி 14.09.2020 ஆம் தேதியன்று எதிர்மனுதாரருக்கு இணையதளம் மூலம் மனு கொடுத்திருந்ததாகவும், தனது புகார் சம்மந்தமாக இணையதள மூலம் பார்த்தபோது, 10.12.2020 ஆம் தேதியிட்டு Application Verified and charges paid. Pending for site inspection from concerned office என குறிப்பிடப்பட்டிருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேலும், அதே தேதியான 10.12.2020 ஆம் தேதி காலை 10.36 மணிக்கு தனது செல்போன் குறுஞ்செய்தியில் Application Ref. 2000629400920335. Document details and attachments verified. Tentative site Inspection 10-12-2020. Call 9445853603 to refix if

needed என இருந்ததாகவும், ஆனால் 14.12.2020 ஆம் தேதியன்று அரசு வழுக்கறிஞரிடம் எதிர்மனுதாரர் தான் கொடுத்துள்ள அனைத்து ஆவணங்களையும் கொடுத்து அதன் பேரில் சட்டக்கருத்துரை வாங்கப்பட்டு, அதனடிப்படையில் இருதரப்பு ஆவணங்களையும் கொடுத்து அந்த ஆவணங்களின் அடிப்படையில் சட்டக்கருத்துரை வாங்கப்பட்டதா என்பதையும், அசல் வழங்கு எண்.52/1999 என்ற எண்ணில் தீர்ப்பு ஏற்பட்டுள்ள ஸ்ரீ மலையாள பகவதி அம்மன், பிள்ளையார் கோவில்களுக்கு சென்ற 9.11.2004 ஆம் தேதி தீர்ப்பு ஏற்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 எதிர்மனுதாரர் 1.12.2004 இல் தீர்ப்பில் ஏற்பட்டுள்ள கோவில்களுக்கு தானசெட்டில்மெண்ட் வாங்கியுள்ளார் என்பதையும் நிரூபிக்கும் பொருட்டு தனது மற்றும் திரு.சண்முகம் அவர்களின் ஆவணங்கள் உதவி மின் பொறியாளர் வசம் உள்ளதாகவும், இதன் அடிப்படையில் தான் சட்டக்கருத்துரை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும், நீதிமன்றம் தீர்ப்பு சொல்லப்பட்டுள்ள ஒரு இடத்தை ஒரு நபருக்கு மீண்டும் தான செட்டில்மெண்ட் செய்து தர முடியுமா என்பதையும் பொருத்து எதிர்மனுதாரர் தங்களிடம் அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 எதிர்மனுதாரர்கள் சரியாக மனுவை பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பிக்காமல் வேண்டுமென்றே 5 மாத காலமாக நடவடிக்கை எடுக்காமல் காலதாமதம் செய்துவிட்டு, தானாகவே 12.2.2021 ம் தேதியன்று அரசு வழக்கறிஞர் சட்ட கருத்துரை வழங்கியதன் பேரில் தங்கள் மனு ரத்து செய்யப்படுகிறது என்று 8.3.2021 ம் தேதியன்று பதிவு தபால் மூலம் பதில் தெரிவித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும், மின்சார சட்டத்தின்படி மின் இணைப்பு வழங்குவதற்கு அனைத்து ஆவணங்களும் கொடுக்கப்படடதன் பேரில் தான் 10/12/2020 ம் தேதி Application Verified and charges paid. Pending for Site inspection from concerned office மற்றும் நிலை application cancelled. G.P. Musiri has given legal opinion not to effect the service connection until the disposal of the court case என்று தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும், அதனால் தான் சென்ற 8.3.2021ம் தேதியன்று கண்காணிப்பு பொறியாளர் TANGEDCO (SE) அவர்களுக்கு கொடுத்த மேல்முறையீட்டு மனுவில் பிறப்பித்த உத்தரவின்பேரில் நான் சென்ற 26.3.2021 ஆம் தேதியன்று உயர்திரு. தலைவர் அவர்கள் மக்கள் குறைதீர்க்கும்

மன்றம், திருச்சி அவர்களுக்கு மனு தாக்கல் செய்திருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேற்படி மனுவினை பெற்றுக்கொண்ட குறைதீர்க்கும் மன்றம் விசாரணை செய்தது. 30.7.2021 ம் தேதி நடைபெற்ற விசாரணையில், மனுதாரரை மட்டும் விசாரித்து சம்மந்தமில்லாத CGRF ல் கொடுத்த மனுவிற்கு எதிராக 3 ஆவணங்களை கேட்டதாகவும், அதற்கு வழக்கறிஞர் அறிவுரையின்படி பதில் தருகிறேன் என கூறி வந்துவிட்டதாகவும், அதன்பின்னர், மேற்படி குறைதீர்க்கும் மன்றத்திற்கு தெளிவாகவும், விளக்கமாகவும் 1.9.2021 ஆம் தேதியன்று எனது தரப்பில் 3 ஆவணங்களை இணைத்து பதில் அனுப்பியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 அதன்பின்னிட்டு 4.9.2021 ஆம் தேதியன்று குறைதீர்க்கும் மன்றத்தில் நடைபெற்ற விசாரணையில், தான் நேரில் ஆஜராகி தனது தரப்பில் சுமார் 34 ஆவணங்களை இணைத்து பதில் கொடுத்துள்ளதாகவும், அன்றைய தினம் தன்னை விசாரணை ஏதும் செய்யவில்லை எனவும், தான் கொடுத்த பதில் மற்றும் ஆவணங்களை வாங்கி வைத்து கொண்டு தான் கொடுத்த மனு மீது எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை எனவும் அதன்பின்னர் சென்ற 27.9.2021 ஆம் தேதியிட்டு தனக்கு உத்தரவு குறைதீர்க்கும் மன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி உத்தரவில் தனக்கு திருப்தியளிக்காத நிலையில் உள்ளதால் மனு மீது மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்வதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 மேலும், அரசு வழக்கறிஞர் அவர்கள் சட்டத்திற்கு அப்பாற்பட்டு நீதிமன்ற தீர்ப்பற்கு பின்னால் ஏற்பட்ட ஆவணத்திற்கு 14.12.2020–இல் ஒரு சட்ட சருத்துரை வழங்கியுள்ளதாகவும், அந்த சட்ட கருத்துரையானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல எனவும், மேற்படி அ.வ.எண்.52/1999–இல் ஏற்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைகளை சட்டக்கருத்துரையில் சொல்லவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மேலும் அசல் வழக்கு எண்.124/2005 என்பது தான் மற்றும் கணேசன் தங்களுக்காகவும், தெற்கு திரணியாம்பட்டி ஊர் பொது முக்களுக்காகவும் என

விளம்புகை செய்து அதன்பேரில் அனுமதித்து மேற்கொண்ட இடங்களுக்கு வழக்கு நடைபெறுகிறது எனவும், ஆனால் டிரஸ்டியை பொருத்து வழக்கு இல்லை எனவும், மேலும், அ.வ.எண்.124/2005 என்ற வழக்கில் அரசு வழக்கறிஞர் தங்களுக்கு எதிராக வழக்காடி வருவதாகவும், அவ்வாறிருக்க எந்த அடிப்படையில் சட்ட கருத்துரை வழங்க முடியும், அவ்வாறு வழங்கும் சட்டக்கருத்துரை சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 CGRF-இல் தலைவரும், மேற்பார்வை பொறியாளர் அவர்கள் CGRF online petition 19-11-2020 No.191120124323, 28-12-2020. 20-01-2021, 8-3-2021 ஆகிய நான்கு மனுக்களுக்கு தன் இஷ்டம் போல் பதில் கொடுத்திருப்பது சட்டப்படி தவறாகும் எனவும், ஏனென்றால் குறைதீர்க்கும் மன்றத்திற்கு அனுப்பப்பட்ட நான்கு மனுக்களுக்கும் மூன்று நபர்கள் கொண்ட குழு மூலம் தான் விசாரணை செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும், ஆனால், மேற்பார்வை பொறியாளர் மட்டும் தனிப்பட்ட முறையில் பதில் கொடுத்துள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 மேலும், குறைதீர்க்கும் மக்கள் மன்றத்தில் 27.09.2021 ஆம் தேதியிட்டு பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவில் எந்தவொரு அவணங்களையும் தாக்கல் செய்யாததால் மனு முடிக்கப்பட்டுவிட்டது என்று கூறியிருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல எனவும், தான் 4.9.2021-ஆம் தேதியன்று 34 ஆவணங்களை இணைத்து தனது தரப்பில் பதில் கொடுத்துள்ளதாகவும், அவற்றை பொருத்து எந்தவிதமான பரிசீலனை செய்ய தவறிவிட்டதாகவும், மேலும், எதிர்மனுதாரர்களை 30.7.2021, 4.9.2021ஆம் தேதிகளிலும் விசாரணை செய்யவில்லை எனவும், CGRF-இல் தன்னுடைய குறைகளை விசாரணை செய்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், மின் இணைப்பு வேண்டி தாக்கல் செய்த மனு தற்போது என்ன நிலையில் உள்ளது என்பதை மேற்படியார்கள் அறியவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மின்சார துறையின் சட்ட விதிகளின்படி நீதிமன்ற உத்தரவு மற்றும் Indemnit Bond தாக்கல் செய்தால் மின் இணைப்பு வழங்கலாம் என்று உள்ளது எனவும், அந்த ஆவணங்களையும் நான் தர்மகர்த்தா என்பதற்குண்டான ஆவணங்களையும், எதிர்மனுதாரரிடம் கடந்த 27.11.2020 ஆம் தேதி வருவாய் ஆவணம் மற்றும் நிர்வாகம்

ஆகியவைகளுக்கு அனுப்பிய தபாலுக்கு 30/11/2020 ம் தேதியன்று பதில் மற்றும் விளக்க கடிதம் கொடுத்ததன்பேரில், application Verified and charges paid. Pending for site inspection from concerned office என குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், அதே தேதியான 10.12.2020 ஆம் தேதி 10.36 மணிக்கு எனது செல்போனிற்கு குறுஞ்செய்தி வந்துள்ளதாகவும், மேற்படி குறுஞ்செய்தியில் Application Ref.200062940920335 Document details and attachments verified. Tentative site inspection 10-12-2020. Call 9445853603 to refix if needed என இருந்ததாகவும், இதன் அடிப்படையில் தான் CGRFஇல் விசாரணை மேற்கொண்டு திரு.சண்முகம் மற்றும் வழக்கறிஞர் ஆகியோரின் ஆவணங்களை பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பித்திருக்க வேண்டும் எனவும், CGRF குழு மின் இணைப்பு மனு தற்போது என்ன நிலையில் உள்ளது என்பதை அறியவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 ஆகையால் அனைவரையும் ஆவணங்களுடன் ஆஜராகவும் தனது மனுவின்பேரில் தகுந்த விசாரணை செய்தும், உரிய முறையில் உண்மை தன்மைகளை ஆராய்ந்தும், முசிறி வட்டம், வெள்ளூர் அஞ்சல், தெற்கு திரணியாம்பட்டி கிராமம் என்ற முகவரியில் உள்ள ஸ்ரீசெல்வசித்தி விநாயகர் கோவிலுக்கு புதிய மின் இணைப்பு வழங்க வேண்டியும் மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 அய்யம்பாளையம் பிரிவு மின் வாரிய அலுவலகக் கட்டுப்பாட்டில் உள்ள தெற்கு திராணியம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ விநாயகர் கோவிலுக்கு திரு.கே.அப்பாவு, த/பெ. குண்டு என்பவரும் திரு.சண்முகம், த/பெ. பழனியாண்டி என்பவரும் 14.9.2020 மற்றும் 17.9.2020 அன்றும் முறையே மின் இணைப்பு வழங்க வேண்டி இணையதளம் வாயிலாக விண்ணப்பித்ததாகவும், இருவரும் முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் அவர்களுடைய விண்ணப்பங்கள் Hold செய்யப்பட்டு 29.9.2020 அன்று இருவருக்கும் முறையான வருவாய் ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரி Notice வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 கிராம நிர்வாக அதிகாரி அளித்த சான்றிதழ்படி மேற்படி கோவில் உள்ள இடம் திரு.சுப்பிரமணியன் த/பெ. முத்தன் பெயரில் உள்ளதாகவும், மேலும் விசாரணையின் அடிப்படையில் கோவில் பொது இடம் என்றும் தெரிய வருகிறதாக VAO சான்று அளித்துள்ளதாகவும், இருவரும் கோவில் தர்மகர்த்தா என்பதற்கான முறையான சான்று

வழங்கவில்லை எனவும், மேற்படி கோவிலின் டிரஸ்டி பதவியை பொறுத்து முசிறி மாண்புமிகு உரிமையில் நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண் 124/2005 நடைபெற்று வருவதால் அதன் தீர்ப்பை பொருத்து மின் இணைப்பு வழங்க மேல் நடவடிக்கை எடுக்க இயலும் என்று 14/12/2020 அன்று அரசு வழக்றிஞர் அவர்களிடமிருந்து சட்ட கருத்துரு பெறப்பட்டதாகவும், எனவே இருவருடைய விண்ணப்பங்களும் 12.2.2021 அன்று ரத்து செய்யப்பட்டதாகவும், இதன் பிறகு திரு.அப்பாவு , த/பெ குண்டு அவர்கள் ஸ்ரீ விநாயகர் கோவிலுக்கு மின் இணைப்பு தரவில்லை என திருச்சி மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் உள்ள CGRF மன்றத்தில் மனு அளித்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 தெற்குதிராணியாம்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ விநாயகர் கோவிலுக்கு திரு கே.அப்பாவு அவர்கள் மின் இணைப்பு கோரி அளித்த மனு சம்பந்தமாக அனைத்து ஆவணங்களும் CGRF தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்களால் 30.7.2021 அன்று ஆய்வு செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 ஆவணங்களின்படி மேற்படி கோவில் உள்ள இடம் திரு.சுப்பிரமணியன், த/பெ.முத்தன் பெயரில் உள்ளதாகவும் மற்றும் தாசில்தார் சான்றில் கோவில் உள்ள இடம் சம்பந்தமாகவும், கோவில் யாருக்கு சொந்தம் எனவும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை என்று மன்ற உறுப்பினர்களால் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், மேலும் திரு.கே.அப்பாவு அவர்கள் தான் கோவில் தர்மகர்த்தா என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை எனவும் மன்ற உறுப்பினர்களால் உறுதி செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 எனவே தர்மகர்த்தா என்ற முறையில் கோவிலுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு பின் குறிப்பிட்ட ஆவணங்கள் முறையே

- தாசில்தார் அவர்களிடமிருந்து கோவில் உள்ள இடத்திற்கான மற்றும் கோவில் உரிமையாளருக்கான நிலப்பட்டா மற்றும் ஆவணங்கள்,
- கோவில் உள்ள இடம் அரசுக்கு சொந்தமான இடம் எனில் மின் இணைப்பு வழங்க தாசில்தார் அவர்களிடமிருந்து தடையில்லா சான்று (No objection Certificate)
- திரு.கே.அப்பாவு அவர்கள் தான் கோவில் தர்மகர்த்தா என ஊர் பொதுமக்கள் நிறைவேற்றிய தீர்மான நகல்

ஆகியவற்றை சமர்ப்பிக்கும் பட்சத்தில் மேற்படி கோவில்களுக்கு மின் இணைப்பு வழங்க உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டு மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டதாகவும், மேலும் 4.9.2021 அன்று நடைபெற்ற அடுத்தகட்ட விசாரணையிலும், முதல் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் சமர்ப்பிக்கும்படி குறிப்பிட்ட எந்த ஒரு ஆவணங்களையும் திரு.அப்பாவு அவர்கள் சமர்ப்பிக்கவில்லை. எனவே முசிறி மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் உள்ள அசல் வழக்கு எண் 124/2005–இன் தீர்ப்பின் அடிப்படையில் தான் மேற்படி கோவிலுக்கு மின் இணைப்பு வழங்க மேல் நடவடிக்கை எடுக்க இயலும் என மன்றத்தில் முடிவு செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

**7.1** மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர்ஆகியோர்களின் வாதங்களை கருத்தில் கொண்டால், கீழ்கண்டவை வழக்கெழு வினாவாக தெரிகிறது.

(i) ஒரு புதிய தாழ்வழுத்த மின்இணைப்பை வழங்க விதிகளில் கூறப்பட்டுள்ள வழிமுறைகள் என்ன?

(ii) மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது ஏற்புடையதுதானா ?

**8.0 <u>வழக்கெழு 1–ற்கான தீர்வு–</u>**

**8.1** ஒரு புதிய தாழ்வழுத்த மின் இணைப்பை பெறுவது சம்பந்தமான விதிகள் பற்றி அறிந்துகொள்ள தற்பொழுது அமலில் உள்ள தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(3)ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ 27. Requisitions for Supply of Energy:*
*(1) xxx xxx xx*
*(2) xxx xxx xx*
*(3) The application for HT service connection shall be in FORM-4. Application for LT service connection (other than Agriculture and Hut), LT Agriculture service connection and LT Hut service connection shall be in FORM - 1,2 and 3 respectively.*

*Note : Requisitions for supply of energy ( Applications) , even if incomplete, and irrespective of whether they are handed over in person or by post, should be acknowledged in writing. If they are in order, they shall be registered immediately and acknowledged. If they are incomplete, the defects should be indicated and returned without registration.”*

8.2 மேற்கண்ட விதி 27(3) ன் படி தாழ்வழுத்த மின்சாரம் விவசாயம் தவிர்த்த விண்ணப்பங்கள் படிவம்–1ன் படியும் குடிசைக்கான மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் படிவம்–3ன் படியும் இருக்க வேண்டும். இங்கு வழங்கப்பட்ட மின்இணைப்பு தாழ்வழுத்த மின்இணைப்பு என்பதால் அதற்கான விண்ணப்ப படிவம்–1 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"FORM-1***

***Application Form for L.T. Service connection (except Agriculture and Hut)***

***FORM OF REQUISITION FOR SUPPLY OF LOW TENSION ENERGY (SINGLE PHASE / THREE PHASE)***

*xxx xxx xx*

*Note : The application shall be accompanied with the following documents:*

*(i)* *Certified copy of proof of ownership such as sale deed/ partition deed/gift settlement /allotment letter/computer patta /ownership certificate issued by revenue department officials /court judgment or recent property tax receipt.*

*(ii)* *In the case of joint property, certified copies of proof of ownership such as legal heir certificate along with parent documents specified in note(i) above and consent letters from co-owners. If consent letter is not produced, anindemnity bond with enhanced security deposit.*

*(iii)* *If the applicant is not the owner, consent letter from owner in FORM No.5 or valid proof of occupancy, and indemnity bond in FORM No.6."*

**8.3** மேற்கண்ட படிவத்தின்படி கீழ்கண்ட ஆவணங்களும் இணைத்து விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

i) உடைமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான விற்பனை ஒப்பாவணம்/ பிரிவினை ஒப்பாவணம்/பரிசு ஒப்பந்தம்/ஒதுக்கீடு கடிதம்/கணினி பட்டா/வருவாய்த்துறை அதிகாரிகளினால் வழங்கப்பட்ட உரிமைப் பத்திரங்கள்/நீதிமன்ற தீர்ப்பு அல்லது சொத்துவரி ரசீது.

ii) கூட்டு சொத்து உடைமைகளுக்கு உடைமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான சட்டப்படியான வாரிசு சான்றிதழ், அதனோடு குறிப்பு (i)ல் கூறப்பட்டிருக்கும் மூல ஆதாரங்களும் மற்றும் கூட்டுரிமையாளர்களின் இசைவு கடிதங்கள் இல்லையென்றால் ஈட்டுறுதி பிணைமுறியோடு மிகுதிப்படுத்தப்பட்ட காப்பீட்டுத்தொகை.

iii) விண்ணப்பதாரர் உடைமையாளர் இல்லையென்றால் உடைமையாளரின் இசைவுக் கடிதம் படிவம்–5 இல் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது செல்லத்தக்க குடியிருப்பவர் சான்றும் படிவம்–6ல் உள்ள ஈட்டுறுதி பிணைமுறி சமர்ப்பிக்க வேண்டும்.

8.4 எனவே, புதிய மின்இணைப்பு கோருவோர் ஒழுங்குமுறை ஆணையத்தால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தோடு பத்தி **8.3–**இல் தெரிவிக்கப்பட்டு இருக்கும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என அறியமுடிகிறது.

**9.0 <u>வழக்கெழு 2–ற்கான தீர்வு–</u>**

9.1 கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி மேல்முறையீட்டாளர் தாழ்வழுத்த மின்னிணைப்பு கோரும் படிவம், தலைவர் வெள்ளூர் ஊராட்சி அவர்களின் சான்றிதழ், கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ், ஆதார் எண், அசல் வழக்கு எண்.52/99–இன் நகல் மற்றும் உறுதிமொழி பத்திரம் ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளார். மேலும் கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், வெள்ளூர் கிராம நத்தம் புல எண்.98/6பி–இல் உள்ள 0.0700 ஏர்ஸ் நிலம் கிராம கணக்கின்படி முத்தன் மகன் சுப்ரமணியன் என்பவர் பெயரில் (நத்தம் பட்டா எண்.208) உள்ளது எனவும், மேற்படி இடத்தில் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது எனவும், மேற்படி கோயில் ஊர் பொதுக் கோயில் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9.2 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மேல்முறையீட்டாளர் தர்மகர்த்தா என்ற முறையில் கோவிலுக்கு மின் இணைப்பு பெறுவதற்கு 1. தாசில்தார் அவர்களிடமிருந்து கோவில் உள்ள இடத்திற்கான மற்றும் கோவில் உரிமையாளருக்கான நிலப்பட்டா மற்றும் ஆவணங்கள், (2). கோவில் உள்ள இடம் அரசுக்கு சொந்தமான இடம் எனில் மின் இணைப்பு வழங்க தாசில்தார் அவர்களிடமிருந்து தடையில்லா சான்று (No objection Certificate) மற்றும் (3). திரு.கே.அப்பாவு அவர்கள் தான் கோவில் தர்மகர்த்தா என ஊர் பொதுமக்கள் நிறைவேற்றிய தீர்மான நகல் ஆகியவற்றை சமர்ப்பிக்கும் பட்சத்தில் மேற்படி கோவிலுக்கு மின் இணைப்பு வழங்க உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

9.3 வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி புதிய மின்இணைப்பு கோருவோர் ஒழுங்குமுறை ஆணையத்தால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தோடு பத்தி **8.3–**ல் தெரிவிக்கப்பட்டு இருக்கும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என தீர்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கை பொறுத்தவரை மின்னிணைப்பு கோரும் கோவில் உள்ள இடத்திற்கு மேல்முறையீட்டாளர் உரிமையாளர் அல்ல. கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழி**ன்படி** பிள்ளையார்

கோயில் அமைந்துள்ள இடம் முத்தன் மகன் சுப்ரமணியன் என்பவருக்கு சொந்தம் என அறியமுடிகிறது. எனவே, மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு வழங்க வேண்டி இணையதளம் வாயிலாக 14.09.2020 அன்று விண்ணப்பித்த படிவத்துடன் முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் அவருடைய விண்ணப்பம் Hold செய்யப்பட்டு 29.09.2020 அன்று முறையான வருவாய் ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரி Notice வழங்கப்பட்டு அதை சமர்பிக்காத நேர்வில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது. எனவே, மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பத்துடன் ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட ஆவணங்கள் சமர்பிக்கும் நேர்வில் அவருடைய பயன்பாட்டிற்கு ஏற்ப விதப்பட்டி(Tariff) நிர்ணயம் செய்து அவருடைய மின்னிணைப்பு விண்ணப்பத்தை எதிர்மனுதாரர்கள் பரிசீலனை செய்யலாம் என தீர்வு செய்யப்படுகிறது.

## 10.0 <u>முடிவுரை:</u>

10.1 பத்தி 9–இல் உள்ள தீர்வுகளின்படி மின்னிணைப்பு கோரும் கோவில் உள்ள இடத்திற்கு மேல்முறையீட்டாளர் உரிமையாளர் அல்ல. கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழின்படி பிள்ளையார் கோயில் அமைந்துள்ள இடம் முத்தன் மகன் சுப்ரமணியன் என்பவருக்கு சொந்தம் என அறியமுடிகிறது. எனவே, மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு வழங்க வேண்டி இணையதளம் வாயிலாக 14.09.2020 அன்று விண்ணப்பித்த படிவத்துடன் முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் அவருடைய விண்ணப்பம் Hold செய்யப்பட்டு 29.09.2020 அன்று முறையான வருவாய் ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரி Notice வழங்கப்பட்டு அதை சமர்பிக்காத நேர்வில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ரத்து செய்யப்பட்டது என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது. எனவே, மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பத்துடன் ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட ஆவணங்கள் சமர்பிக்கும் நேர்வில் அவருடைய பயன்பாட்டிற்கு ஏற்ப வீதப்பட்டி(Tariff) நிர்ணயம் செய்து அவருடைய மின்னிணைப்பு விண்ணப்பத்தை எதிர்மனுதாரர்கள் பரிசீலனை செய்யலாம் என முடிவு செய்யப்படுகிறது.

10.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண் 80/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

(செ. தேவராஜன்)
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்:
1. திரு. K. அப்பாவு, த/பெ. குண்டு,
தெற்கு திரணியாம்பட்டி கிராமம்,
முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.
தொலைபேசி: 97872 04495

2. செயற்பொறியாளர்/இ.கா./முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், T.Pet ரோடு முசிறி,
முசிறி தாலுக்கா – 621 211.

3. உதவி செயற்பொறியாளர்/இ.கா./முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV SS வளாகம், T.Pet ரோடு முசிறி,
முசிறி தாலுக்கா – 621 211.

4. உதவி பொறியாளர்/ இ.கா./அய்யம்பாளையம்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
5/41–E1, சேலம் மெயின் ரோடு, அய்யம்பாளையம் அஞ்சல்,
முசிறி தாலுக்கா – 621 202.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
**திருச்சி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம் மெயின் ரோடு, திருச்சி – 620 020.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.